அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை. 257

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
21. ஜூன், 1984.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

பிரிவு அ நாட்சம்பள உத்தியோகத்தர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி வழங்கல்.

பிரிவு ஆ நாட்சம்பள சுருக்கெழுத்தாளர்களுக்கும் தட்டெழுத்தாளர்களுக்கும் வேதனம்.

நாட்சம்பள உத்தியோகத்தரொருவர் (அமயம் அல்லது தற்காலிகம்) 5-4-84ஆம் தேதிய 247 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு 18-11-81ஆம் தேதிய 378 ஆம் இலக்கத் தாபனச் சுற்றுநிருபத்தின் தேவைகளுக்கு அமைய 1-மார்ச் 1984 ஆம் திகதி தொடக்கம் வாழ்க்கைச் செலவுப் படியில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பெறத் தகுதியுடையவராவார்.

02. ஒரு மாதத்தின் வருகை சம்பளத்துடனை விடுமுறைகள் உட்பட 21 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாயிருந்தால் மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியான ரூ.246/- வழங்கப்படலாம்.

03. ஒரு மாதத்தின் வருகை சம்பளத்துடன் விடுமுறைகள் உட்பட 21 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாயிருந்தால் உரிய மேலதிக வாழ்க்கைச் செலவுப் படியான ரூ.102/- அல்லது ரூ.51/- வழங்கப்படலாம்.

குறிப்பு: குறிப்பிட்ட ஒரு மாதத்தில் சம்பளத்துடனை விடுமுறை நாட்கள் உட்பட 21 நாட்களுக்குக் குறைவாக இருக்கும் பட்சத்தில் மேற்குறித்த வாழ்க்கைச் செலவுப் படியானது எங்ஙனம் கணிக்கப்படுமெனில் அந்தந்தப் படிகளை 21ஆல் பிரித்து வரும் தொகையை பொது விடுமுறை நாட்கள் உட்பட வருகை நாட்களின் எண்ணிக்கையால் பெருக்குவதால் ஆகும்.

04. குறிப்பிட்டதொரு உத்தியோகத்தர் பொதுவிடுமுறை நாளுக்கு உடனடுத்த நாளன்று அல்லது உடன் முந்திய/நாளில் பணியாற்றியிருந்தால் அவருக்கு பொது விடுமுறை நாளுக்கான வேதனம் வழங்கப்பட வேண்டும்.

## பிரிவு - ஆ

நாட்சம்பள சுருக்கெழுத்தாளருக்கு அல்லது தட்டெழுத்தாளருக்கு (அமயம் அல்லது தற்காலிகம்) உரிய வேதனம் பின்வருமாறு அமையும்.

(அ) சுருக்கெழுத்தாளர்

வகுப்பு 1 - நாளொன்றுக்கு ரூ.35/-

வகுப்பு 11 - நாளொன்றுக்கு ரூ.25/-உடன் அதன் 1/5 பாகமும்

(ஆ). தட்டெழுத்தாளர்

நாளொன்றுக்கு ரூ.21.50 உடன் அதன் 1/5 பாகமும்

(29-12-81 ஆம் தேதிய 197-ஆம் இலக்க அ.நி. சுற்றறிக்கையையும் 26-4-82ஆம் தேதிய 197 (1) ஆம் இலக்க அ.நி. சுற்றறிக்கையையும் பார்க்க.)

(2) இவற்றுடன் மேற்போந்த பிரிவு அ-இல் 2 ஆம், 3 ஆம் பந்திகளில் காட்டப்பட்டவாறு வாழ்க்கைச் செலவுப் படிகளை நாட்சம்பள சுருக்கெழுத்தாளரொருவருக்கோ நாட்சம்பளத் தட்டெழுத்தாளர் ஒருவருக்கோ வழங்குதல் வேண்டும். அத்துடன் பிரிவு அ-இல் 4 ஆம் பந்தியில் கூறப்பட்டதற்கமைய விருந்தால் பொது விடுமுறை நாளுக்கும் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) பிரிவு-"அ" 4ஆம் பந்தியின்படி ஒரு பதிற் கடமை புரியும் சுருக்கெழுத்தாளர் அல்லது தட்டெழுத்தாளர் ஒரு மாதத்தில் 3 நாட்களுக்கு மேல் கடமையாற்றியிருந்தால் பொதுவிடுமுறை நாளில் பணியாற்றியதற்கு சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும்.

ஒப்பம்: டபிள்யு. ஜயமாஉற.
தாபனப் பணிப்பாளர்.